IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:34/2013

**DEP OF WITNESS:** DW1 NAME: Archana Date:17-12-2021

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து ஆதியில் ரங்கநாதன் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது அவர் யாரிடமிருந்து வாங்கினார் என்று எனக்கு தெரியாது. ரங்கநாதனுக்கு பாத்தியப்பட்டது என்பதால் அவர் யாருக்கு வேண்டுமானாலும் சொத்தை விற்கலாம் என்றால் சரிதான். வழக்கு நிலுவையிருந்தது எனது அப்பா இறப்பதற்கு முன்பே தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் 50 சதவித சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டதாக சொல்லியுள்ளேன். ஏற்கனவே விற்றது போக விற்கப்படாமல் உள்ள சொத்து பி அட்டவணை சொத்தா என்றால் அதைப்பற்றி தெரியாது. பி.சா.ஆ.10 ஆவணத்தை பார்த்து எந்தெந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டது என்று என்னால் சொல்ல இயலாது. தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியாது என்றும் அதனால் தான் அனைத்து கேள்விகளுக்கும் தவறான பதிலை சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணத்தில் சொத்துக்களை பொறுத்து பராமரிப்பதற்காக மட்டுமே அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது ஆனால் ஆவணத்தில் எங்கேனும் நாங்கள் சொத்துக்களை அனுபவிக்க உரிமை கோரப்பட்டுள்ளதா என்றால் பராமரித்தல் அனுபவித்தல் இரண்டும் ஒன்றுதான் என்று சாட்சி கூறுகிறார். அனுபவம் வேறு பராமரிப்பு வேறு என்பதால் உண்மையில் நாங்கள் அனுபவத்தில் இருந்தால் வருவாய் இன ஆவணங்களை எங்கள் பெயரில் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. வருவாய் இன ஆவணங்கள் எதுவும் எங்கள் பெயரில் இல்லை. இடத்தை வாங்கியவர்கள் பெயரில் தான் உள்ளது. பொது அதிகாரம் எழுதிகொடுத்த நபருக்கு உரிமையாளர் என்ற அடிப்படையில் சொத்துக்களை விற்பனை செய்தபிறகு அதுகுறித்த உரிய கணக்கு வழக்குகளை அவ்வப்போது முதல்வருக்கு கொடுத்து ரசீது பெறவேண்டும் அவ்வாறு பெற்றுள்ளோமா என்றால் அவ்வாறு எவ்வித ரசீதும் பெறுவதில்லை.

**(பிரதிவாதியின் வழக்கறிஞர் மேற்படி கேள்விக்கு ஆட்சேபணை தெரிவித்தார் அது பதிவு செய்யப்பட்டது)**

தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும் அதில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தானாக அவரது அப்பா இறந்தபிறகு எனது பெயரிலும் எனது அம்மாவின் பெயரிலும் தனியாக அதிகார பத்திரம் எழுதிகொடுத்ததாக கூறுகிறார். அந்த ஆவணத்தினை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனத வழக்கறிஞர் தாக்கல் செய்யவேண்டும் என்று சொன்னால் தாக்கல் செய்ய தயாராக உள்ளோம். வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது அதுபோன்ற ஆவணங்கள் எழுதிகொண்டது சட்டப்படி தவறானது என்று சொன்னால் சரியல்ல. ஆவணங்கள் சார்பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டது சார் பதிவாளரும் இவ்வழக்கில் ஒரு தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான். ஆவணங்கள்

எழுதிகொடுத்தது தவறு என்பதால் தான் இதுநாள் வரையிலும் நான் சொல்லக்கூடிய ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2013ம் ஆண்டில் இவ்வழக்கு தாக்கல் செய்தபோதே எனது அப்பா மூன்றாம் தரப்பினர் யாருக்கும் வழக்கு சொத்தினை வழக்கு முடியும் வரை விற்கக்கூடாது என்று இடைக்கால உத்தரவு உள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் சொல்வது பொய் என்றும் அந்த விவரம் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தானாக அந்த உத்தரவுக்கு பிறகு எதுவும் விற்பனை செய்யவில்லை என்று கூறுகிறார். எனது அப்பா மேற்படி இடைக்கால உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்து அதுவும் விசாரணைக்குபிறகு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. சாந்தி எனது அம்மா, லோகேஸ்வரி, சோபனா எனது சகோதரிகள். சோபனா என்பவருக்கு மட்டும் திருமணம் ஆகிவிட்டது அவர் சென்னையில் உள்ளார். வழக்கு தாக்கல் செய்தபிறகு பி.சா.ஆ.13 ஆவணத்தினை பற்றி எனக்கு தெரியும். 1991 தாவா சொத்தினை ரங்கநாதன் வாதிக்கு விற்றுவிட்டார் என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரியும். 1991ல் எனக்கு 5 வயது இருக்கும் என்றால் சரிதான். 1991ம் வருடத்தில் எனக்கு 5 வயது இருக்கின்ற காரணத்தினால் வாதிக்கு ரங்கநாதன் விற்கவில்லை என்று சொல்வது சரியல்ல என்றால் தவறு. வாதிக்கு ரங்கநாதன் எழுதிகொடுத்த பிறகு வாதி கீதா என்பவருக்கு கிரயம் 2006ல் பி.சா.ஆ.2 ஆவணம் மூலம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் கீதா 2ம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு வாதி விற்பனை செய்த பிறகு அந்த சொத்தினை அபகரிக்க வேண்டி திட்டமிட்டு எனது அப்பா 1,2 மற்றும் 3 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல. 1991ல் வாதி கிரயம் வாங்கியதை மறைத்து 4,5,6 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து பி.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.10 அப்புருவல் பஞ்சாயத்து தலைவதை சுவாதீனப்படுத்தி வாங்கியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணஙகள் 1 முதல் 3, 5 முதல் 12 முழுவதும் எனக்கும் ஆவணங்களுக்கும் சம்மந்தமில்லை என்றும் அதனை நான் தாக்கல் செய்வதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நாங்கள் உரிமையார்கள் இல்லை என்பதால் அதில் உரிமை கோரி ஆவணங்களை தாக்கல் செய்யவோ இயலாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரங்களை மறுப்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கைப்பற்றயும் வழக்கு விவரத்தை பற்றியும் தாவா சொத்துக்களை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கு எனது அப்பா எழுதி கொடுத்த எதிருரையை பற்றி தெரியாது. ஆகையினால் எனது பிரமாண வாக்குமூலத்தில் அனைத்தும் எனக்கு தெரியும் என்று சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. வாதி

தாவாவில் கோரியுள்ளபடி அவருக்கு பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை இல்லை என்று பதிவுசெய்யப்பட்டது.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/. A.CHELLAPANDIAN
DISTRICT MUNSIF